**பண்டுவஸ்நுவர பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்கீட்டு குறிப்புக்களின் பிரகாரம் அட்டுறு அடிப்படை மற்றும் காசு அடிப்படை பின்னபற்றப்பட வேண்டியிருந்த போதும் பின்பற்றப்பட்ட வருமானம் மற்றும் செலவின விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருப்பு மதிப்பீடு அடிப்படை கணக்கு குறிப்புக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 192,020 தொகையான ஆயுர்வேத மருந்து இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான இறுதியில் திகதியில் உள்ளவாறு 3 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றம் அட்டவணைகளின் மீதிகளுக்கு இரடையே ரூபா 182,451 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 147,141,487 தொகையான பெற வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 26,376,186 தொகை ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக இருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 128,560,752 தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 22,306,971 தொகை ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்கான தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் இன்மையால் ரூபா 121,482,001 தொகையான 06 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்க முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1597/8 மற்றறும் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி | 170,000 | (i) சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் தொடர்பாடல் கோபுரங்களுக்காக செயன்முறைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை |
| | 132,000 | (ii) சபை அங்கீகாரம் கிடைத்திருந்த 21 தொடர்பாடல் கோபுரங் களுக்காக செயன்முறைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,420,109 ஆக காணப்பட்டதுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 56,603,856 ஆக காணப்பட்டது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டிய லிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டிய லிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 3,424 | 3,776 | 2,387 | 156 | 2,966 | 3,764 | 2,214 | 754 |
| (ii) | வாடகை | 22,442 | 24,439 | 16,824 | 99 | 32,036 | 29,313 | 14,305 | 180 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 1,108 | 1,306 | 1,296 | 6 | 1,015 | 1,196 | 1,196 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 111,084 | 91,756 | 75,097 | 50,130 | 102,214 | 125,100 | 80,993 | 44,107 |
| | மொத்தம் | 138,058 | 121,277 | 95,604 | 50,391 | 138,231 | 159,373 | 98,708 | 45,041 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 121 மில்லியனில் இருந்தும் முன்னைய ஆண்டுகளின் நிலுவை 45 மில்லியனில் இருந்தும் ரூபா 96 மிலலியன் அறவிடப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 28 மில்லியன் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக இருந்தது. முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 45 மில்லியனான நிலுவை மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 50 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 91,956 ஆன வீதவரி நிலுவை ரூபா 1,000 இற்கு மேற்பட்டு காணப்பட்ட 27 அலகுகளிலிருந்து ரூபா 66,260 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிலுவை நீர்க் கட்டணங்கள் ரூபா 708,689 ஆக இருந்ததுடன் துண்டிக்கப்பட்ட 15 நீர் அலகுகளுக்குரிய ரூபா 125,387 ஆன நிலுவை காணப்பட்டது.

(இ) 34 வியாபார அலகுகளுக்குரிய ரூபா 48,000 ஆன வியாபார வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 152(4) பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத் தொகை மற்றும் முத்திரைக் கட்டணங்கள் முறையே ரூபா 8,721,589 தொகையும் ரூபா 36,413,507 தொகையும் காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுச் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நலனோம்புகை மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சரால் தயாரிக்கப்பட்ட பொது உப விதிகள் பின்பற்றப்பட்டிருந்தன.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தனை வழங்காமை**

ரூபா 3,310,247 தொகையான இரண்டு செயற்திட்டங்களின் நடவடிக்கை 2017 திசெம்பர் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் ரூபா 13,370,108 தொகையான 22 நிர்மாணங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

மீளாய்வாண்டிற்குரிய திண்மக்கழிவுப் பொருள் நிலையத்தின் ரூபா 5,010,559 ஆன மூலதன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆண்டில் 2015 தொன் சேகரிக்கப்பட்டிருந்த கழிவுப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டு 23,575 கிலோ கிராம் கொம்போஸ்ட் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்ததுடன் வறுமையை ஒழிப்பதனை நோக்காக கொண்டு பின்னணி தனியான கிராமங்கள் அபிவிருத்தி செயற்திட்டங்கள், மகளிர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றம் தாய் மற்றும் குழந்தை போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஹெட்டிபொல பேரூந்து நிலையத்தின் 04 கடைகளிலிருந்து ரூபா 5,516,737 ஆன முற்பண கொடுப்பனவு தொகை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்த நிர்மாண பட்டியலொன்று தயாரிக்காமல் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு ரூபா 400,000 வீதம் மீளாய்வாண்டின் பாதீட்டில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

தற்போது சபையில் சேவயில் இல்லாத 21 பேரிடமிருந்து ரூபா 359,289 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.4 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) குறைந்தது மாத வாடகை ரூபா 71,250 ஆன 06 கடைகள் 2017 ஆம் ஆண்டின் போது ாடகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 1,950 ஆன மாத வாடகை அறவிடப்படாமல் 04 கடைகள் புதிய மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை அறவிடுவதற்கும் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

(அ) வருடாந்தம் சபை நிதியத்திலிருந்து பராமரிக்கப்படும் 143 மயானங்களை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபை பயன்படுத்தி வந்த கெப் வண்டியொன்று தலைமை செயலாளரிடமிருந்து கையேற்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 பெறுகை**

**3.6.1 வழங்கல் மற்றும் சேவைகள்**

அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக சந்தை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்பட்டிருந்த போதும் பதிவுசெய்யப்படாத வழங்குனருக்கு கூடிய முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது.

**3.6.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மலகனே வளவ்வத்த முதலாவது ஒழுங்கை ரூபா 610,345 ஆல் அச்சுக்கல் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதும் வீதியின் 3x2.8 மீற்றர் அளவொன்று அச்சுக்கள் கீழிறங்கியிருந்ததுடன் ரூபா 28,114 செலவிடப்பட்டு இடப்பட்டிருந்த சரளைக் கற்கள் கழுவிச்செல்லப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 3,602,730 உடன்படிக்கை பெறுமதியான திண்மக கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் கட்டிட நிர்மாணம் 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 12 ஆந் திகதி வரை நிர்மாணம் பூர்த்திசெய்யப்படாமல் இருந்ததுடன் ரூபா 94,571 ஆன தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

06 வருமான மற்றும் செலவின விடயங்களில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான எண்ணிக்கைக்கு இடையே 15 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான பொருண்மையான விலகலொன்று அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (ஆ) | பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பேணாமை | உறுதிகள் மற்றும் கையளிப்பு சான்றிதழ் இல்லாத கட்டிடங்கள் மற்றும் மயானங்கள் காணிக்காக உறுதிகள் பெற்றுக் கொள்ளப்படாமை |
| (இ) | பெறுகை செயற்பாடு | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) பாதீட்டு விலகல் காணப்படல்<br>(ii) நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்கள் பட்டியலொன்று உள்ளடக்கப்படாமை. |
| (உ) | ஒப்பந்த நிர்வாகம் | (i) செலவிடப்படும் பணத்திற்கு நலன்கள் கிடைக்காமை<br>(ii) வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களில் கண்காணிப்பு பலவீனமாக இருத்தல் |